DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.49/16 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | அன்பரசி |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 30-05-2022.

முதல்விசாரணை

நான் பருப்பநாதபுரத்தில் குடியிருந்து தனியார் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 28.06.2015ம் தேதியன்று நான் எனக்கு சொந்தமான TN 72AA 9437 என்ற Tvs EL இருசக்கர வாகனத்தில் திருச்செந்தூர் சாலையில் எனது கணவர் கோயில் ராஜ் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன் வண்டியில் எனது இரு பிள்ளை கள் இருந்தார்கள். கருங்குளம் யூனியன் ஆபிஸ் எதிரே மேற்கே நோக்கி சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த TATA இன்டிகா கார் பதிவெண் TN 72 AR 3837 அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து எனது வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். விபத்தின் காரணமாக

எனது கணவருக்கு தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. வலது கை முட்டியில். வலது காலில் ரத்தகாயம் ஏற்பட்டது. எனக்கு தலை மற்றும் இடது கண்ணில் அடிப்பட்டு ரத்தகாயம் ஏற்பட்டது. எனது பெண் குழந்தைக்கு இடது கன்னத்தில், மூக்கில், நாடியிலும் ரத்தகாயம் ஏற்பட்டது. பையனுக்கு சிறிதளவு கன்னத்தில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிதான் சம்பத்தன்று இன்டிகா காரை ஓட்டி வந்த நபர் ஆவார். ( சாட்சி திறந்த நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காட்டினார்) 108 ஆம்புலன்ஸ் மூலமாக எங்களை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். சிகிச்சை பலன் இன்றி எனது கணவர் சிறிது நேரத்தில் இறந்து விட்டார். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்த விவரத்தை சொல்லி அவர்கள் எழுதிக் கொண்டார்கள் அதனை படிக்க கேட்டு தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் புகார் வாக்குமூலம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>.

சம்பவ சமயத்தில் எனது மூத்தமகளுக்கு வயது 9 2வது குழந்தைக்கு 7 வயது ஆகும், சம்வத்தின் போது எனது மடியில் இரு குழந்தையும் உட்கார வைத்திருந்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இரு குழந்தைகளையும் இரு கையால் பிடித்திருந்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது யூனியன் ஆபிஸ் எதிர்புறம் என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் புதிப்பிக்கவில்லை. ரோட்டின் இடதுபுறத்திற்கு வலதுபுறம் உள்ள கருங்குளம் யூனியன்

அலுவலகத்திற்கு திருப்புவதற்ககாக எனது கணவர் வண்டியை ஓட்டிக் கொண்டு கவனக்குறைவாக எவ்விதமான செய்கையும் காட்டமாமல் எதிர்பாரவிதமாக திருப்பும் போது முன்னாடி இருந்த நீங்கள் இரு குழந்தைகளையும் இரு கைகளால் பிடித்திருப்பதால் பேலன்ஸ் பன்னமுடியாமல் நிலைதடுமாறி கீழே விழுந்ததால் எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பத்தில் கணவர் இறந்ததால் விபத்து காப்பீடு பெறுவதாற்காக எதிரே வந்த வாகனம் கவனக்குறைவாக வந்தது என்று சொன்னால் சரியல்ல. விபத்து எனது கணவரின் கவனக்குறைவால் வந்தது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

# DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.49/16 |
| Depostition of witness for | Prosecution wit. PW.2 |
| Name | Magdhaline |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 15 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 30-05-2022.

<u>சாட்சியின் உளத்தன்மையை பரிசோதிக்க வேண்டி கீழ்க்கண்ட கேள்விகள் கேட்கப்பட்டது.</u>

<u>கேள்வி இது என்ன இ</u>டம்

<u>பதில் </u>இது நீதிமன்றம்

கேள்வி:– அமர்ந்திருப்பவர் யார் என்றால்

பதில்:– நீதிபதி ஆவார்

<u>சாட்சியின் உளத்தன்மையை பரிசோதித்து திருப்தி அடைந்த பின்</u>

<u>முதல்விசாரணை</u>

நான் பருப்பநாதபுரத்தில் குடியிருந்து 9ம் வகுப்பு படித்து வருகிறேன்.

அ.சா.1 எனது தாயார் ஆவார். கடந்த 28.06.2015ம் தேதியன்று நான் எனது தகப்பனாருடன் எங்களுக்கு சொந்தமான TN 72AA 9437 என்ற Tvs XL இருசக்கர வாகனத்தில் திருச்செந்தூர் சாலையில் சர்ச்க்கு சென்றோம். எனது தகப்பனார் கோயில் ராஜ் ஓட்ட நான் மற்றும் எனது அம்மா, எனது தம்பி பின்னால் அமர்ந்து சென்றோம். திருச்செந்தூர் ரோட்டில் கருங்குளம் யூனியன் ஆபிஸ் எதிரே சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த TATA இன்டிகா கார் பதிவெண் TN 72 AR 3837 அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து எங்களது வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். ஆஜர் எதிரி தான் சம்பவத்தின் போது காரை ஓட்டி வந்த நபர் ஆவார். விபத்தின் காரணமாக எனது தகப்பனாருக்கு தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. எனது தாயாருக்கு தலை மற்றும் இடது கண்ணில் அடிப்பட்டு ரத்தகாயம் ஏற்பட்டது. எனக்கு இடது கன்னத்தில், மூக்கில், நாடியிலும் ரத்தகாயம் ஏற்பட்டது. எனது தம்பிக்கு சிறிதளவு காயம் ஏற்பட்டது. ( சாட்சி திறந்த நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காட்டினார்) 108 ஆம்புலன்ஸ் மூலமாக எங்களை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். சிகிச்சை பலன் இன்றி எனது தகப்பனார் சிறிது நேரத்தில் இறந்து விட்டார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>.

சர்ச்க்கு போகும் போது விபத்து நடந்ததா என்றால் சரிதான். சம்வத்தின் போது எனது அம்மா மடியில் நான் மற்றும் எனது தம்பி உட்கார்ந்திருந்தோம் என்றால் சரிதான். எனது அப்பா வண்டியை ஓட்டும் போது முன்னாடி மறைத்து கொண்டதால் எதிரே நடப்பது தெரியாது என்றால் சரிதான். சாட்சி

சொல்ல எனது அம்மா சொல்லி கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் குழந்தை என்பதால் அப்போது எனக்கு விவரம் தெரியாது என்றால் சரியல்ல. விபத்து எனது தகப்பனாரின் கவனக்குறைவால் வந்தது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.49/16 |
| Depostition of witness for | Prosecution wit. PW.3 |
| Name | ஆல்பர்ட் ராஜன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 30-05-2022.

<u>முதல்விசாரணை</u>

நான் பருப்பநாதபுரத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் எனது சித்தப்பா மகன் கோயில் ராஜ் அவரது Tvs XL இருசக்கர வாகனத்தில் திருச்செந்தூர் சாலையில் எனது தம்பி கோயில் ராஜ் ஓட்ட அ.சா.1 மற்றும் அ.சா2 மற்றும் தம்பி பின்னார் உட்கார்ந்து கொண்டு கருங்குளம் யூனியன் ஆபிஸ் எதிரே மேற்கே நோக்கி சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த TATA இன்டிகா கார் ஓட்டிவந்து வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள். விபத்தின் காரணமாக எனது தம்பிக்கு தலையின் பின்புறத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

கூட்டமாக இருந்ததால் நான் சென்று அடிபட்டவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். சிகிச்சை பலன் இன்றி எனது தம்பி சிறிது நேரத்தில் இறந்து விட்டார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை